Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள்கிழமை, நவம்பர் 20, 2023 | இதழ் 129

# மசோதாக்களுக்கு ஒப்புதல் தராத விவகாரம்
# 3 ஆண்டுகளாக என்ன செய்தீர்கள்? கவர்னருக்கு சுப்ரீம் கோர்ட் கேள்வி



சென்னை, 20 நவம்பர் 2023: தமிழக கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிரான வழக்கு விசாரணையின்போது, '3 ஆண்டுகளாக கவர்னர் என்ன செய்துகொண்டிருந்தார், எந்த முடிவும் எடுக்காமல் மசோதாக்களை கவர்னர் எப்படி நிலுவையில் வைத்திருக்க முடியும்?' என சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப், தெலுங்கானா, டெல்லி உள்பட பல்வேறு மாநிலங்களில் கவர்னர்களுக்கும், ஆளும் மாநில கட்சிகளுக்கும் இடையே மோதல் இருந்து வருகிறது. குறிப்பாக மாநில சட்ட சபைகளில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு கவர்னர்கள் உடனுக்குடன் அனுமதி வழங்குவது இல்லை என்று குற்றச்சாட்டு உள்ளது.

தமிழகத்தில் கவர்னரிடம் 12 மசோதாக்களும், கேரளாவில் கவர்னரிடம் 8 மசோதாக்களும் நிலுவையில் இருக்கின்றன.

தமிழ்நாடு, கேரளா மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகள் செய்தும் கவர்னர்கள் தரப்பில் இருந்து முழுமையான விளக்கம் அளிக்கப்படவில்லை. இதையடுத்து கவர்னர்கள் தங்கள் பார்வைக்கு வரும் சட்ட மசோதாக்கள் மீது குறிப்பிட்ட காலத்துக்குள் ஆய்வு செய்து ஒப்புதல் வழங்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு, கேரள மாநில அரசுகள் வழக்கு தொடர்ந்துள்ளன.

மத்திய அரசுக்கு நோட்டீஸ்

சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் ஜெ.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

கடந்த 10-ந்தேதி இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் கருத்து தெரிவிக்கையில், மாநில சட்ட சபைகளில் நிறைவேற்றப் படும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் கவர்னர்கள் ஏற்படுத்தி வரும் தாமதம் மிகவும் கவலைக்குரியது என்று கூறி இருந்தனர். இது தொடர்பாக பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு நோட்டீசு அனுப்ப உத்தரவிட்டனர்.

இதற்கிடையே தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி கடந்த வாரம் 10 மசோதாக்களை நிறுத்தி வைப்பதாக தகவல் அனுப்பினார்.

இதையடுத்து தமிழக அரசு நேற்று முன்தினம் சிறப்பு சட்டசபை கூட்டத்தை நடத்தி மீண்டும் அந்த 10 மசோதாக்களையும் நிறைவேற்றி அவருக்கு அனுப்பி வைத்தது.

தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டதை தொடர்ந்து கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று மாலை அவசரம் அவசரமாக டெல்லி புறப்பட்டு சென்றார். அங்கு அவர் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞரிடம் ஆலோசனை நடத்தியதாக தெரிய வந்துள்ளது.

மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விசயத்தில் கவர்னர் மாளிகை சார்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை கவர்னர் ஆர்.என்.ரவி, தலைமை வக்கீலிடம் விளக்கி கூறியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த நிலையில் கவர்னர்களுக்கு எதிரான வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலில் கேரள அரசு சார்பில் தொடரப்பட்ட வழக்கு சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது கேரள அரசு சார்பில் மூத்த வக்கீல் கே.கே.வேணுகோபால் ஆஜராகி 2 ஆண்டுகளுக்கு மேலாக 3 அவசர சட்டங்கள் மற்றும் 8 மசோதாக்களுக்கு கவர்னர் ஆரிப்கான் ஒப்புதல் தரவில்லை என்று வாதாடினார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், கேரள கவர்னர் ஆரிப்கானின் செயலாளர் பதில் அளிக்கும்படி அவருக்கு நோட்டீசு அனுப்ப உத்தரவிட்டனர்.

அதன் பிறகு தமிழக அரசு சார்பில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது.

காலஅவகாசம் நிர்ணயுங்கள்

அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான வக்கீல் வாதாடுகையில்,

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட 10 மசோதாக்களை உரிய விளக்கம் இல்லாமல் கவர்னர் திருப்பி அனுப்பியுள்ளார். இந்த மசோதாக்கள் மீண்டும் சட்டசபையில் நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு ஒப்புதல் அளிக்க கால அவகாசம் நிர்ணயம் செய்ய வேண்டும். ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திடம் வந்து முறையிட முடியாது. 7.3 கோடி மக்களுக்கு அரசு பதில் சொல்ல கடமைப்பட்டு உள்ளது.

மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்காததால் தமிழ்நாடு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2020 முதல் 13-க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் கவர்னர் தாமதம் செய்கிறார்.

இவ்வளவு காலம் மசோதாக்களை கிடப்பில் போட்டு விட்டு தற்போது சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வர இருக்கிறது என்றவுடன் அதை திருப்பி அனுப்பி இருக்கிறார் என்றார்.

ஆவணம் தாக்கல்

அதற்கு நீதிபதிகள், அந்த விவகாரம் தொடர்பான ஆவணங்கள் உள்ளனவா? அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுங்கள் என்றனர்.

அதற்கு மத்திய அரசு தலைமை வக்கீல், சிறு குறிப்பு வடிவிலான ஆவணம் உள்ளது. அதனை நகல் எடுக்க வேண்டும் என்றார்.

அதற்கு நீதிபதிகள், அந்த சிறு குறிப்பை நீதிமன்றத்தில் சமர்ப்பியுங்கள் என்றார்.

பின்னர் மூத்த வக்கீல் வில்சன் ஆஜராகி, தமிழக பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர் நியமனம் தொடர்பான மசோதா வழக்கும் இன்று பட்டியலிடப்பட்டுள்ளது. அதனையும் இந்த வழக்கோடு இணைத்து விசாரிக்க வேண்டும் என்றார்.

தமிழக அரசு மூத்த வக்கீல் அபிஷேக் சிங்வி வாதாடுகையில், ஏற்கனவே மசோதாக்கள் இயற்றப்பட்டு அனுப்பிய நிலையில் அதனை கிடப்பில் போட்டு விட்டு தற்போது 10 மசோதாக்களை கவர்னர் திரும்ப அனுப்பி உள்ளார். அதனை சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பப்பட்டு உள்ளது என்றார்.

கவர்னர் திருப்பி அனுப்பியது ஏன்?

அப்போது நீதிபதிகள், "சுப்ரீம் கோர்ட்டில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது கூட ஏன் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு பிறகு மசோதாக்களை கவர்னர் திருப்பி அனுப்பியது ஏன்?

3 ஆண்டுகளாக கவர்னர் என்ன செய்து கொண்டிருந்தார்?

நவம்பர் 10-ந்தேதி கோர்ட்டில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நவம்பர் 13-ந்தேதி மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்று நீதிபதிகள் அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பினர்.

பின்னர் தமிழக அரசு தரப்பில் வாதாடிய வக்கீல், சட்டமன்றம் இயற்றிய மசோதா தவறாக இருந்தாலும் அதனை நிறுத்தி வைக்க கவர்னருக்கு என்ன அதிகாரம் உள்ளது. 2-ம் முறையாக இயற்றி அனுப்பியுள்ள மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஏற்கனவே மசோதாவை கிடப்பில் போட்டு விட்டு தற்போது திருப்பி அனுப்பியது ஏன்? 2-வது முறையாக நிறைவேற்றப்பட்ட மசோதாவை நிதி மசோதாவாகத்தான் பார்க்க வேண்டும். உரிய காரணங்கள் இன்றி மசோதாக்களை கவர்னர் திருப்பி அனுப்பினார்.

தமிழக கவர்னர் ஒவ்வொரு நிபந்தனையையும் மீறி இருக்கிறார். மாநில அரசு மற்றும் அமைச்சர்களின் ஆலோசனைப்படி ஒரு கவர்னர் செயல்பட வேண்டும் என்று வாதாடினார்.

அவகாசம்

அதற்கு நீதிபதிகள், "பெறப்பட்ட 181 மசோதாக்களில் 152 மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கவர்னர் தரப்பில் கூறப்படுகிறது. தற்போது அனுப்பப்பட்டுள்ள மசோ தாக்கள் மீது நடவடிக்கை எடுக்க கவர்னருக்கு அவ காசம் தர வேண்டும்" என்றனர்.

அதற்கு தமிழக அரசு தரப்பில், "மசோதாக்கள் மீது வித்ஹோல்ட் என கவர்னர் கூற முடியாது. உரிய காரணங்கள் வழங்கப்பட வேண்டும்" என்றனர்.

அதற்கு மத்திய அரசு வக்கீல், "கவர்னருக்கு உள்ள துணைவேந்தர்கள் நியமன அதிகாரத்தை மாநில அரசு பறிக்க முயல்கிறது. மசோதாக்களுக்கு மறைமுக ஒப்புதல் பெற முயலும் இது போன்ற மனுக்களை அனுமதிக்கக் கூடாது" என்று வாதாடினார்.

பின்னர் தலைமை நீதிபதி, "மசோதாவை நிறுத்தி வைப்பதாக கூறும் போது அதை மறுபரிசீலனைக்கு அனுப்பலாம் என கருத முடியுமா? கூடிய விரைவில் மசோதாக்களை காரணங்களுடன் திருப்பி அனுப்ப வேண்டும். மசோதாக்களை பரிசீலித்த பிறகே நடவடிக்கை எடுக்க முடியும்" என்றார்.





இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
நவம்பர் 20, 2023

# 40 ஆண்டாக மக்கள் பயன்படுத்திய ஆவின் பச்சை நிற பால் பாக்கெட்: 25-ந் தேதி முதல் நிறுத்தம்



சென்னை, 20 நவம்பர் 2023: இம்மாதம் 25-ந் தேதி முதல் தமிழகம் முழுவதும் பச்சை நிற பால் பாக்கெட் நிறுத்தப்படுவதாக ஆவின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

தமிழக அரசின் நிறுவனமான ஆவின் பால் பொது மக்கள் இடையே வரவேற்பை பெற்றுள்ளது. தமிழகம் முழுவதும் 30 லட்சம் லிட்டர் பால் ஆவின் வினியோகம் செய்கிறது. சென்னையில் மட்டும் 14.75 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனையாகிறது.

ஆவின் பால் 4 வகையான பால் பாக்கெட்டுகளை வினியோகம் செய்து வருகிறது. இருமுறை சமன்படுத்தப்பட்ட பால் (1.5 சதவீத கொழுப்புச் சத்து), சமன் படுத்தப்பட்ட பால் (3 சதவீத கொழுப்புச் சத்து), அதிகளவு விற்பனையாகக் கூடிய நிலைப்படுத்தப்பட்ட பால் (4.5 சதவீதம் கொழுப்புச் சத்து) பச்சை நிற பாக்கெட்டில் வினியோகிக்கப்படும் பொது மக்கள் மத்தியில் அதிக வரவேற்பை பெற்ற பால் என 4 வகை. மொத்த விற்பனையில் ஆவின் பச்சை நிற பாக்கெட் 40 சதவீதம் இடம் பெற்று உள்ளது. 40 ஆண்டுகளுக்கு மேலாக இது மக்கள் விரும்பும் பால் பாக்கெட்டாக அமைந்துள்ளது. பச்சைநிற பால் பாக்கெட் லிட்டர் ரூ.44-க்கு விற்பனை செய்யப்படுகிறது. டிலைட் ஊதா பாக்கெட் 3.5 சதவீத கொழுப்புச் சத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த பாலின் விலையும் லிட்டர் ரூ.44 ஆகும். ஆனால் கிரீன் மேஜிக் பச்சைநிற பால் பாக்கெட்டுகளை விரும்பி வாங்கி வருகிறார்கள்.

மற்ற தனியார் பால் பாக்கெட் விலை லிட்டருக்கு ரூ.54 முதல் ரூ.56 வரை உள்ள நிலையில் நிலைப்படுத்தப்பட்ட ஆவின் பால் ரூ.44-க்கு கிடைப்பதால் கடைகளில் உடனே விற்று தீர்ந்து விடுகிறது. 4.5 கொழுப்பு சத்துள்ள பாலை லிட்டர் ரூ.44-க்கு விற்பதால் ஆவின் நிறுவனத்துக்கு நஷ்டம் அதிகரித்து வருகிறது. வெளிமாநிலங்களில் இருந்து வெண்ணை பால் பவுடர் ஆகியவற்றை அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலையில் பச்சை நிற பால் பாக்கெட் வினியோகம் செய்யப்படுவதால் அதிக வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

இதனால் பச்சை நிற பால் பாக்கெட் வினியோகத்தை ஆவின் படிப்படியாக குறைத்து டிலைட் ஊதா வகைக்கு வாடிக்கையாளர்களை மாற்றி வருகிறது. சென்னை தவிர பெரும்பாலான மாவட்டங்களில் பச்சை நிற பால் பாக்கெட் நிறுத்தப்பட்டுவிட்டன. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் தான் இன்னும் பச்சை நிற பால் பாக்கெட் விற்பனையாகிறது. அதுவும் மிக குறைந்த அளவிலேயே வினியோகிக்கப்படுகிறது.

இதுகுறித்து ஆவின் பொது மேலாளர் (மார்க்கெட்டிங்) சுனேஜா கூறுகையில், பால் அட்டை கார்டுதாரர்களுக்கு டிசம்பர் 1-ந் தேதி முதல் அதே விலையில் டிலைட் பால் வினியோகிக்கப்படும். டிலைட் பால் கார்டு விற்பனையை செயல்படுத்தவும், டிசம்பர் 16-ந் தேதி முதல் வினியோகத்தை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது என்றார்.

# சேதுபாவாசத்திரம், சம்பைபட்டினத்தில் 32 வது தலைமுறைத் திருப்பேரர் சங்கைக்குரிய அஸ்ஸையது ஜமாலிய்யா மௌலானா 76 ஆம் ஆண்டு கந்தூரி அன்னதான விழா



சென்னை, 20 நவம்பர் 2023: தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி வட்டம் சேதுபாவாசத்திரம் அருகே உள்ள சம்பைபட்டினம் மறவம்வயல் மவுலானா தோட்டத்தில் மறைந்து வாழும் ஞானமகான் வலிய்யுல் அக்பர், நபிகள் நாயகத்தின் 32 வது தலைமுறைத் திருப்பேரர் சங்கைக்குரிய அஸ்ஸையது ஜமாலிய்யா மௌலானா 76 ஆம் ஆண்டு கந்தூரி அன்னதான விழா நடைபெற்றது. சம்பைப்பட்டணத்தில் உள்ள ஜமாலிய்யா மௌலானா தர்காவில் புதன்கிழமை காலை 10 மணி முதல் 1 மணி வரை சுபுஹான மவுலிது ராத்திபு மஜ்லிஸ் மற்றும் நபிப்புகழ் பாமாலை ஓதி, உலக அமைதிக்காகவும் மக்கள் அனைவரும் உடல் நலத்துடனும் வாழவும் பிரார்த்தனை நடைபெற்றது. விழாவுக்கு அஹ்லுல் பைத் குடும்பத்தினர், காதிரிய்யா தரீக்கா கலீபாக்கள் முன்னிலை வகித்தனர். திருச்சி ஜமிஆ யாசின் அரபுக் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள், ஜம்இய்யத்துல் உளமா & யாஸீனிய் மௌலவிகள் பேரவை, உலமாக்கள் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மற்றும் தமிழகமெங்கும் இருந்து முரீதுகள், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்டவர்களுக்கும் சம்பைப்பட்டினம், மறவன் வயல், செந்தலைவயல், ஊமத்தநாடு உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த பொதுமக்களுக்கும் கந்தூரி அன்னதானம் வழங்கப்பட்டது.

**Cements**

**Bulker / Bags**

**ALL Major Brands available**

**We Shall supply Cements with most competitive pricing**

Rtn Dr R Sathyanarayanan
Senior Consultant

**SRMPR Cements**

**Call or Whatsapp @ 8148231942**

# உலகக் கோப்பை கிரிக்கெட்; இந்திய ரசிகர்களின் கனவு கலைந்தது: ஆஸ்திரேலியா 6-வது முறையாக 'சாம்பியன்'



சென்னை, 20 நவம்பர் 2023: உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா 6-வது முறையாக சாம்பியன் கோப்பை வென்றது. இதன் மூலம் இந்திய ரசிகர்களின் கனவு கலைந்தது.

உலகக் கோப்பை கிரிக்கெட் 4 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதன்படி 13-வது உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் கடந்த மாதம் 5-ந்தேதி இந்தியாவில் தொடங்கியது. 10 அணிகள் பங்கேற்ற இந்த கிரிக்கெட் திருவிழாவில் லீக் மற்றும் அரைஇறுதி முடிவில் இந்தியா-ஆஸ்திரேலியா இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இந்த நிலையில் இவ்விரு அணிகளில் மகுடம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இறுதி ஆட்டம் ஆமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று அரங்கேறியது. இரு அணியிலும் மாற்றம் ஏதும் இல்லை.

குழுமியிருந்த ஒரு லட்சத்திற்கு மேலான ரசிகர்கள் மத்தியில் 'டாஸ்' ஜெயித்த ஆஸ்திரேலிய கேப்டன் கம்மின்ஸ் தயக்கமின்றி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார். இரவில் பனிப்பொழிவின் தாக்கத்தில் பேட்டிங் செய்வது எளிது என்பதை மனதில் கொண்டு இந்த முடிவை எடுத்தார்.

ரோகித் சர்மா 47 ரன்

இதையடுத்து கேப்டன் ரோகித் சர்மாவும், சுப்மன் கில்லும் இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக அடியெடுத்து வைத்தனர். முதல் ஓவரில் 3 ரன்னோடு இன்னிங்சை தொடங்கினர். ரோகித் சர்மா வழக்கம் போல் ஆக்ரோஷமாக மட்டையை நாலாபுறமும் சுழற்றினார். ஹேசில்வுட்டின் பந்து வீச்சில் பவுண்டரி, சிக்சர் தெறிக்கவிட்டு ரசிகர்களை குதூகலப்படுத்தினார். மறுமுனையில் சுப்மன் கில் (4 ரன்) மிட்செல் ஸ்டார்க்கின் வேகத்தில் அடங்கினார்.

இதன் பின்னர் ரோகித் சர்மாவுடன், விராட் கோலி இணைந்தார். ஸ்கோர் 76 ஆக (9.4 ஓவர்) உயர்ந்த போது ரோகித் சர்மா 47 ரன்களில் (31 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்) மேக்ஸ்வெலின் சுழலில் சிக்கினார். அவர் தூக்கியடித்த பந்தை 'கவர்-பாயிண்ட்' திசையில் இருந்து பின்னோக்கி ஓடி சென்று டிராவிஸ் ஹெட் பிரமாதமாக கேட்ச் செய்து அசத்தினார். அடுத்த வந்த ஸ்ரேயாஸ் அய்யர் 4 ரன்னில் வெளியேறினார். முந்தைய இரு ஆட்டங்களில் தொடர்ச்சியாக சதம் அடித்த ஸ்ரேயாஸ் இந்த முறை ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை.

அடுத்தடுத்து 3 முன்னணி தலைகள் உருண்டதால் இந்தியாவின் ரன்வேகம் ஒரேயடியாக சரிந்தது. 4-வது விக்கெட்டுக்கு விராட் கோலியும், விக்கெட் கீப்பர் லோகேஷ் ராகுலும் கைகோர்த்து நிதானமாக ஆடினர்.

ஆஸ்திரேலியாவின் பந்து வீச்சும், பீல்டிங்கும் பிரமிப்பாக இருந்தது. பக்காவான திட்டமிடலுடன் பந்து வீசிய ஆஸ்திரேலிய வேக சூறாவளிகள் 'ஷாட்பிட்ச்' பந்துவீச்சில் நிறைய வித்தியாசத்தை காண்பித்தும், ஸ்டம்பை குறி வைத்து வீசியும் திணறடித்தனர். இதனால் அதிரடி காட்ட இயலாமல் இந்திய பேட்ஸ்மேன்கள் தகிடுதத்தம் போட்டனர். பவுண்டரி செல்வதே அபூர்வமாக தெரிந்தது. 11-வது ஓவரில் இருந்து 97 பந்துகளில் பந்து எல்லைக்கோடு பக்கமே தலைக்காட்டவில்லை.

என்றாலும் கோலி களத்தில் நின்றது வரை அணி 280 ரன்களை தாண்டும் போல் தோன்றியது. ஆனால் அவர் முக்கியமான கட்டத்தில் விக்கெட்டை தாரை வார்த்ததால் நிலைமை மோசமானது. ஸ்கோர் 148-ஐ எட்டிய போது கோலி (54 ரன், 63 பந்து, 4 பவுண்டரி) கம்மின்ஸ் பந்துவீச்சில் போல்டு ஆனார். அதாவது சற்று எழும்பி வந்த பந்து அவரது பேட்டின் உள்பகுதியில் பட்டு ஸ்டம்பை பதம் பார்த்தது. ஒரு கனம் நம்ப முடியாமல் விரக்தியோடு கிளம்பினார்.

இந்தியா 240 ரன்

இதன் பின்னர் ஆஸ்திரேலிய பவுலர்களின் பிடி மேலும் இறுகியது. ஜடேஜாவும் (9 ரன்) தாக்குப்பிடிக்கவில்லை. இன்னொரு பக்கம் லோகேஷ் ராகுல் ஒன்றிரண்டு ரன் வீதம் எடுப்பதிலேயே கவனம் செலுத்தியதால் ரன்ரேட் இன்னும் மந்தமானது.

11-வது ஓவரில் இருந்து 40-வது ஓவர் வரை பந்து 2 முறை மட்டுமே பவுண்டரிக்கு ஓடியது. முந்தைய நாளில் ஆஸ்திரேலிய கேப்டன் கம்மின்ஸ், இந்தியாவுக்கு ஆதரவாக ஒரு லட்சத்திற்கு மேல் ரசிகர்கள் திரண்டாலும் அவர்களின் ஆர்ப்பரிப்பை அமைதியாக்குவதே தங்களது இலக்கு என்று கூறியிருந்தார். சொன்னபடியே அவர் களத்தில் செய்து விட்டார். பவுண்டரி வறட்சியால் பெரும்பாலான நேரங்களில் மைதானம் நிசப்தமாக காட்சி அளித்தது. ராகுல் தனது பங்குக்கு 66 ரன்கள் (107 பந்து, ஒரு பவுண்டரி) எடுத்தார். பின்வரிசையில் சூர்யகுமார் யாதவும் (18 ரன், 28 பந்து, ஒரு பவுண்டரி) பெரிய அளவில் ஜொலிக்கவில்லை.

50 ஓவர் முடிவில் இந்திய அணி 240 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. இந்த உலகக் கோப்பையில் இந்தியா ஆல்-அவுட் ஆனது இதுவே முதல் முறையாகும். ஆஸ்திரேலியா தரப்பில் மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்டும், ஹேசில்வுட், கம்மின்ஸ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

அடுத்து 241 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஆஸ்திரேலியா தொடக்கத்தில் கொஞ்சம் தடுமாறியது. டேவிட் வார்னர் (7 ரன்), மிட்செல் மார்ஷ் (15 ரன்), ஸ்டீவன் சுமித் (4 ரன்) ஆகியோர் ஷமி-பும்ராவின் தாக்குதலில் நடையை கட்டினர்.

எதிரணி 47 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் இந்திய வீரர்களும், ரசிகர்களும் உற்சாகமானார்கள். ஆனால் இந்த ஆனந்தம் அதிக நேரம் நீடிக்கவில்லை.

4-வது விக்கெட்டுக்கு மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் டிராவிஸ் ஹெட்டும், மார்னஸ் லபுஸ்சேனும் கூட்டணி அமைத்து தங்கள் அணியை சிக்கலில் இருந்து காப்பாற்றினர். சில ஓவர்கள் தடுப்பாட்டத்தில் ஈடுபட்ட ஹெட் அதன் பிறகு தனக்கே உரிய பாணியில் பந்தை எல்லைக்கோட்டுக்கு தெறிக்கவிட்டு நெருக்கடியை தணித்தார். அவருக்கு லபுஸ்சேன் நன்கு ஒத்துழைப்பு தந்தார். எதிர்பார்க்கப்பட்ட குல்தீப் யாதவ், ரவீந்திர ஜடேஜாவின் சுழற்பந்து வீச்சு சுத்தமாக எடுபடவில்லை. இதனால் ஆஸ்திரேலியாவின் கை மறுபடியும் ஓங்கியது. சொதப்பலான பீல்டிங்கால் பின்பகுதியில் அதிக ரன்களை கசிய விட்டனர்.

டிராவிஸ் ஹெட் சதம்

பும்ராவின் ஒரே ஓவரில் 3 பவுண்டரி விரட்டிய ஹெட், குல்தீப், ஜடேஜாவின் பந்துவீச்சையும் நொறுக்க தவறவில்லை. அபாரமாக ஆடிய டிராவிஸ் ஹெட் தனது 5-வது சதத்தை பூர்த்தி செய்தார். இந்திய பவுலர்களுக்கு தண்ணி காட்டிய டிராவிஸ் ஹெட் (137 ரன், 120 பந்து, 15 பவுண்டரி, 4 சிக்சர்) வெற்றியின் விளிம்பில் இருந்தபோது கேட்ச் ஆனார். இதன் பின்னர் வந்த மேக்ஸ்வெல் 2 ரன் எடுத்து இலக்கை எட்ட வைத்தார்.

ஆஸ்திரேலிய அணி 43 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 241 ரன்கள் சேர்த்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை ருசித்து கோப்பையை வசப்படுத்தியது. உலகக் கோப்பை இறுதி ஆட்டத்தில் ஒரு அணி விரட்டிபிடித்த அதிகபட்ச இலக்கு இதுவாகும். லபுஸ்சேன் 58 ரன்னுடனும் (110 பந்து, 4 பவுண்டரி), மேக்ஸ்வெல் 2 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகன் விருதையும், இந்திய வீரர் விராட்கோலி தொடர்நாயகன் விருதையும் பெற்றனர்.

6-வது முறையாக...

ஆஸ்திரேலியா உலகக் கோப்பையை உச்சிமுகர்வது இது 6-வது முறையாகும். இதற்கு முன்பு 1987, 1999, 2003, 2007, 2015 ஆகிய ஆண்டுகளிலும் கோப்பையை வென்று இருந்தது.

பரிசுத் தொகை

சாம்பியன் பட்டம் வென்ற ஆஸ்திரேலியாவுக்கு ரூ.33 கோடியும், 2-வது இடம் பெற்ற இந்தியாவுக்கு ரூ.16லு கோடியும் பரிசாக வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணிக்கு கோப்பையை பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய துணை பிரதமர் ரிச்சர்ட் மார்லஸ் ஆகியோர் வழங்கினர்.

அடுத்த உலகக்கோப்பை போட்டியை 2027-ம் ஆண்டில் தென்ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, நமிபியா ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# "சந்தானத்திற்கு 30 கோடி சம்பளம் கொடுக்கும் இடத்திற்கு அவர் உயர வேண்டும் என்று விரும்புகிறேன்." ரூ ஞானவேல்ராஜா

# "பிக் பாஸ் ஹவுஸை விட எங்கள் படப்பிடிப்பில் அதிக கேமராக்கள் இருந்தது" ரூ "80'ஸ் பில்டப் " ஆடியோ வெளியீட்டில் சந்தானம்

# "அவித்த முட்டையிலேயே ஆம்லேட் போடுவார் இயக்குநர் கல்யாண்" - "80'ஸ் பில்டப் " ஆடியோ வெளியீட்டில் சந்தானம்

## "காமெடி கதைகளுக்கான ஹீரோக்கள் இல்லை என்னும் வெற்றிடத்தை வெற்றிகரமாக நிரப்புகிறார் சந்தானம்" - "80'ஸ் பில்டப் " ஆடியோ வெளியீட்டில் கே.எஸ்.ரவிக்குமார் பேச்சு

சென்னை, 20 நவம்பர் *2023:* இயக்குநர் கல்யாண் இயக்கத்தில் ஸ்டுடியோ கிரீன் ஞானவேல்ராஜா தயாரிப்பில், சந்தானம் நாயகனாக நடித்திருக்கும் திரைப்படம் "80'ஸ் பில்டப்". நாயகியாக ராதிகா ப்ரீத்தி நடிக்க, பிற முக்கிய கதாபாத்திரங்களில் ஆடுகளம் நரேன், இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார், மொட்டை ராஜேந்திரன், ஆனந்த்ராஜ், இயக்குநர் சுந்தர்ராஜன், தங்கதுரை, சுவாமிநாதன், கும்கி அஷ்வின், சுபாஷினி கண்ணன், சங்கீதா மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். ஜிப்ரான் இசையமைக்க, ஜேக்கப் ரத்தினராஜ் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். இப்படத்தின் டிரைலர் மற்றும் இசை வெளியீடு சென்னையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தயாரிப்பாளர் தனஞ்ஜெயன் பேசியதாவது, இப்படத்தின் இயக்குநர் கல்யாண் அவர்களை 2015 காலகட்டத்தில் இருந்தே எனக்குத் தெரியும். அவர் வரிசையாக ஆறு படங்களை இயக்கி இருந்தாலும் கூட அவருடைய மொபைல் எண்ணை நான் கே எஸ் பி கல்யாண், அதாவது கதை சொல்லப் போறோம் கல்யாண் என்று தான் பதிவு செய்திருக்கிறேன். அவரது இயக்கத்தில் வந்த படங்களில் எனக்கு கதை சொல்லப் போறோம் திரைப்படம் மிகவும் பிடிக்கும். அதுபோல் ஜாக்பாட், குலேபகாவலி படத்தில் வரும் அந்தப் பாடலை யாரும் மறந்திருக்க மாட்டோம். இயக்குநர் கல்யாணின் காமெடி சென்ஸ் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் இப்படத்தின் படப்பிடிப்பை 15 நாட்களில் முடித்துவிட்டார், 18 நாட்களில் முடித்துவிட்டார் என்றெல்லாம் பத்திரிக்கைகளில் செய்திகளைப் பார்க்கும் போது பயமாக இருக்கிறது. ஏனென்றால் அவை எதுவும் உண்மையில்லை. ஒரு குறிப்பிட்ட டாக்கி போர்ஷனை மட்டும் அவர் 15 நாட்களில் முடித்தார் என்பதே உண்மை. ஆனால் உண்மையாகவே அவரின் உழைப்பின் வேகம் என்னை பிரமிக்க வைக்கிறது. மல்டி கேமரா செட்டப்பை வைத்துக் கொண்டு இவ்வளவு வேகமாக ஒரு படப்பிடிப்பை முடித்துவிட முடியுமா..? என்று எனக்கு இன்னும் ஆச்சரியமாகவே உள்ளது. இப்பொழுது கல்யாண் இயக்கத்தில் எனக்கும் உங்கள் எல்லோருக்கும் பிடித்த நாயகன் சந்தானத்தை வைத்துக் கொண்டு 80'வ பில்டப் படத்தை முடித்திருக்கிறார். எப்பொழுதுமே சந்தானம் பேய்-உடன் முட்டுக் கொடுத்தால் அந்தப் படம் வெற்றி பெற்றுவிடும். இப்படத்தில் அவர் மூன்று ஆவிகளுடன் முட்டுக் கொடுத்து நடித்திருக்கிறார். இது மிகவும் கஷ்டம், இல்லாத ஒன்றை இருப்பது போல் நினைத்துக் கொண்டு நகைச்சுவையாக நடிப்பது சவால் நிறைந்தது. இதை எப்படி இவ்வளவு எளிதாக சந்தானம் செய்து முடிக்கிறார் என்று நான் எப்பொழுதுமே ஆச்சரியப்படுவேன். மேலும் சந்தானம் ஒரு சாவு வீட்டில் இருப்பது போல் அமையும் திரைப்படங்கள் பெரும் வெற்றி பெறும்.ஏ1 திரைப்படம் உங்களுக்கு நினைவு இருக்கும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக அப்படத்தை நான் பலாஸோவில் பார்த்தேன். ஏ சென்டர் ஆடியன்ஸ் கூட மிகவும் ரசித்த திரைப்படம் அது. அப்படத்தின் வெற்றியைப் போல் 80'வ பில்டப் படத்தின் வெற்றியும் அமையும் என்று நம்புகிறேன். சந்தானம் காமெடியில் கலக்கும் திரைப்படங்கள் எதுவுமே சோடை போனதில்லை. மேலும் பெரும் நட்சத்திரப் பட்டாளமே இப்படத்தில் இருக்கிறது. இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் ஒரு வித்தியாசமான கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். சின்ன புரட்சி தலைவர் ஆனந்த்ராஜ் ஒரு கவர்ச்சிக் கன்னியாகவே மாறி வளவளப்பான இடுப்பைக் காட்டி வசீகரிக்கிறார். அந்த இடுப்பை பார்க்கும் போதே தொட வேண்டும் போல் இருக்கிறது. இன்னும் பல்வேறு காமெடி நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். படத்தின் கதைப்படி நாயகன் சந்தானம் கமல் ரசிகர், அவரின் தாத்தா ரஜினி ரசிகர் என்று வித்தியாசமாக கதையை அமைத்து அதகளம் செய்திருக்கிறார் இயக்குநர். இப்படம் நவம்பர் 24ல் திரைக்கு வருகிறது. இப்படம் இயக்குநர் கல்யாண் அவர்களுக்கும் தயாரிப்பாளர் ஞானவேல்ராஜா அவர்களுக்கும் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைய வாழ்த்துகிறேன். படத்தில் நடித்திருக்கும் பிற நடிகர் நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் இசையமைப்பாளர் ஜிப்ரான், பாடலாசிரியர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படத்தை வாங்கி வெளியிடும் சக்தி பிலிம் ஃபேக்டரி சக்திவேலன் அவர்களுக்கும், இசை உரிமத்தை பெற்றிருக்கும் ஜங்லி மியுசிக் பாஸ்கர் அவர்களுக்கும் என் வாழ்த்துக்கள். என்று பேசினார்.



இயக்குநர் கல்யாண் பேசும்போது,

" இப்படத்தை இயக்குவதற்கு வாய்ப்பு அளித்த ஸ்டுடியோ கிரீன் ஞானவேல்ராஜா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். நான் நாளைய இயக்குநர் சீசனில் இருந்து வெளிவந்த உடனே ஒரு தயாரிப்பு நிறுவனத்தில் படம் செய்ய வேண்டும் என்று நினைத்தது ஸ்டுடியோ கிரீன் நிறுவனத்தில் தான். அந்த கனவு இன்று நனவாகி இருக்கிறது. எல்லோருமே நான் வேகமாக படப்பிடிப்பை முடித்து விடுகிறேன் என்று பேசினார்கள். ஆனால் அது என் தனிப்பட்ட ஒருவனால் சாத்தியமான விசயம் அல்ல. என்னோடு பணியாற்றிய தொழில்நுட்பக் கலைஞர்கள், நடிகர் நடிகைகள் அனைவரும் ஒத்துழைத்ததால் தான் சாத்தியமானது. அவர்களுக்கு என் நன்றிகள். நான் இந்தக் கதையை சந்தானம் சாருக்காகவே தான் உருவாக்கினேன். கிட்டத்தட்ட ஒரு வருடம் அவருக்காக காத்திருந்தேன். இடையில் பல்வேறு சிக்கல்கள் வந்தது. இருப்பினும் இப்பொழுது திரைப்படம் முழுமையடைந்து வெளியாக இருக்கிறது. வாய்ப்பளித்த சந்தானம் சாருக்கு நன்றி. பத்திரிக்கை நண்பர்கள் இப்படத்திற்கு ஆதரவு தர வேண்டும்.." என்று பேசினார்.

இயக்குநரும் நடிகருமான கே.எஸ்.ரவிக்குமார் அவர்கள் பேசும் போது, நான் பிறர் இயக்கத்தில் நடிக்க செல்லும் போது இவர்களிடம் இருந்து என்ன கத்துக் கொள்ள முடியும் என்று பார்ப்பேன். அதைப் பார்க்கும் போது எனக்கு என்ன தோன்றும் என்றால், நாமும் இவர்களைப் போல் நிதானமாக 10 பதினைந்து டேக் எடுக்க வேண்டும், மெதுவாக காட்சிப்படுத்த வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். ஆனால் கல்யாண் என்னிடம் கதை சொல்லியவுடன் எப்படியும் இதை எடுக்க 30 நாள் ஆகும் என்று நான் நினைக்க, அவர் 5 நாள் போதும் என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. படப்பிடிப்பு தளத்தில் மொத்த காட்சியும் ஒரே டேக்கில் படமாக்கப்பட இருக்கிறது என்றார். நான் அது நாடகத்தனமாக இருக்குமே என்று கேட்க, இல்லை சார் நான் கட் செய்து கட் செய்து காட்டிவிடுவேன் என்றார். அங்கு போய் பார்த்தால் பல்வேறு கேமராக்களை வைத்துக் கொண்டு ஒரு ரியாலிட்டி ஷோ சூட் செய்வதைப் போல் படம் பிடித்துக் கொண்டு இருந்தார். ஒரு இயக்குநருக்கு எடிட்டிங் அறிவு இருக்க வேண்டும். அது இருந்தால் தான் அவர்கள் நீண்ட காலம் நிலைக்க முடியும். அவருக்கு மிக உறுதுணையாக இருந்தது ஒளிப்பதிவாளர் ஜேக்கப். எல்லா இடங்களிலும் கேமராவை வைத்துவிட்டால் லைட்டை எங்கு தான் வைப்பது. அந்த தலைவலியை எல்லாம் மிகச்சிறப்பாக கையாண்டது ஒளிப்பதிவாளர் ஜேக்கப் தான். அவருக்கு வாழ்த்துக்கள். சந்தானம் தமிழ் சினிமாவில் காமெடி கதைக்கான ஹீரோக்கள் இல்லை என்கின்ற வெற்றிடத்தை மிகச் சிறப்பாக நிரப்பி இருக்கிறார். சில படங்கள் சரியாக போகவில்லை என்றாலும் கூட அதில் தான் என்ன தவறு செய்தேன், அதை எப்படி திருத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற புரிதல் அவருக்கு சிறப்பாக இருக்கிறது. கவுண்டமணி, நாகேஷ் போன்றோர் கூட நாயகனாக நடித்துவிட்டு மீண்டும் காமெடி செய்ய போய்விட்டனர். ஆனால் சந்தானம் தான் என்னவாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார். மேலும் இயக்குநருடனான புரிதல் அவருக்கு சிறப்பாக இருக்கிறது. அவர் மேலும் பல வெற்றிகளைப் பெற என் வாழ்த்துக்கள். எல்லோரும் பேசுவதைப் பார்த்தால் ஆனந்தராஜை அயிட்டமாகவே மாற்றி விடுவார்கள் போல. ஆனந்த்ராஜ் ஆஃப் ஸ்கிரீனில் தான் அதிகமாக கமெண்ட் அடிப்பார். அவர் வில்லனாக நடித்த காலகட்டத்தை விட வெரைட்டியான கதாபாத்திரங்கள் இப்பொழுது தான் கிடைக்கத் துவங்கியிருக்கிறது. சுவாமிநாதனைப் பற்றி சொல்லவே வேண்டாம். அவர் மேடை நாடக நடிகர். இப்படத்தில் எனக்கு மாடர்ன் லோக்கல் எமன் கதாபாத்திரம். ஒரு கைலி மற்றும் டிசர்ட்டை மட்டும் கொடுத்து அனுப்பிவிட்டனர். நான் வலுக்கட்டாயமாக கதாயுதம் வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொண்டேன். விழாவின் நாயகன் ஜிப்ரான் மெலடி கிங். அவரின் மெலடி பாடல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அவருக்கும் படக்குழுவினர் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

இசையமைப்பாளர் ஜிப்ரான் பேசும் போது,

"பொதுவாக காமெடிப் படங்களுக்கு இசை அமைப்பது என்பது மிகவும் கடினம். நான் அதை சில வருடங்கள் தவிர்த்து வந்தேன். த்ரில்லர், ஆக்ஷன் படங்களுக்கு தொடர்ச்சியாக இசையமைத்து ஒரு கட்டத்தில் எனக்கு ஒருவித சைக்கோ மனநிலை வந்துவிட்டது. இனி துணிந்து ஒரு காமெடி படத்திற்கு இசை அமைக்கலாம் என்கின்ற முடிவுக்கு வந்தேன். இப்படத்திற்கு இசை அமைத்தது பெரிய அனுபவம். இயக்குநர் கல்யாண் காமெடி படத்திற்கு இசை அமைப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தார். அவரிடம் இருந்து நான் நிறைய கற்றுக் கொண்டேன். அவருக்கு நன்றி. பாடலாசிரியர்கள் முத்தமிழ், என்னமங்களம் பழனிச்சாமி மற்றும் வாமனன் ஆகியோருக்கு வாழ்த்துக்கள்" என்று பேசினார்.

படத்தின் நாயகி ராதிகா ப்ரீத்தி பேசும் போது,

" நான் ஒரு நல்ல தயாரிப்பு நிறுவனத்தின் படத்தில் நடிக்க வேண்டும் என்று வெகுநாளாக காத்துக் கொண்டு இருந்தேன். இந்த வாய்ப்பைக் கொடுத்த தயாரிப்பாளர் ஞானவேல்ராஜா சாருக்கு நன்றி. நான் கல்யாண் சாரின் மிகப்பெரிய ரசிகை. அவருடைய திரைப்படங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் கல்லூரி காலத்தில் இருந்தே சந்தானம் சாரின் மிகப்பெரிய ரசிகை. என் தோழிகள் என்னை பார்த்தா என்றே அழைப்பார்கள். அவருடன் சேர்ந்து அவருக்கு ஜோடியாக நடித்தது என் பாக்கியம். என்னை அழகாக காட்டியிருக்கும் ஒளிப்பதிவாளருக்கு நன்றி. படக்குழுவினர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்" என்று பேசினார்.

தயாரிப்பாளர் ஞானவேல்ராஜா பேசும் போது,

"ஆனந்தராஜ் சார் கேட்டுக் கொண்டபடியே கண்டிப்பாக மூத்த கலைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். எங்கள் நிறுவனத்தில் படம் செய்த இயக்குநர்களை விட நான் அதிகமாக பழகிய இயக்குநர் என்றால் அது கே.எஸ்.ரவிக்குமார் சார் தான். 'சகுனி' பட டைட்டில் முதலில் சூர்யா நடிக்கும் ஒரு படத்திற்காக முடிவான டைட்டில். சூர்யாவைக் கொண்டு கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ஒரு படம் தயாரிப்பதற்கான முயற்சி இருந்தது. அப்பொழுது நான் கற்றுக் கொண்ட சினிமா அறிவு மிகப்பெரியது. ஒரு கதை, கதை விவாதத்தில் எப்படி வளருகிறது என்று நான் பார்த்துக் கற்றுக் கொண்டது அவரிடம் தான். சிலருடைய வளர்ச்சி நம்மை பொறாமைபடச் செய்யும், சிலருடைய வளர்ச்சி நம்மை எரிச்சலடையச் செய்யும், இன்னும் சிலரின் வளர்ச்சி நம்மை உண்மையாகவே சந்தோசப்படுத்தும். நடிகர் சந்தானத்தின் வளர்ச்சி அப்படிப்பட்டது. ஆரம்பத்தில் ஜில்லுனு ஒரு காதல் படத்தில் நடிக்கும் போது ஒன்றே முக்கால் இலட்சம் நான் சந்தானத்திற்கு சம்பளமாகக் கொடுத்தேன். அடுத்து 18 இலட்சம், அடுத்து 56 இலட்சம் இன்று 3 கோடி வரை சம்பளமாக கொடுக்கிறேன். 30 கோடி சம்பளமாக கொடுக்கும் இடத்திற்கு அவர் வளர வேண்டும் என்று உண்மையாகவே விரும்புகிறேன். அவருடன் சேர்ந்து நானும் வளர வேண்டும் என்று விரும்புகிறேன். இயக்குநர் கல்யாணைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், தயாரிப்பாளரே சற்று மெதுவாக செல்லலாமா..? என்று கேட்கும் அளவிற்கு வேகமாக செல்பவர். திரில்லர் மற்றும் ஆக்சன் படங்கள் வேகமாக எடுத்துவிடலாம். ஆனால் ஒரு காமெடி படத்தினை இவ்வளவு வேகமாக எடுப்பது என்பது மிகப்பெரிய சவால். அதை சிறப்பாக செய்து காட்டியிருக்கிறார். எனக்கே யார் யார் நடிக்கிறார்கள் என்பது ஒரு கட்டம் வரை தெரியாது. ஆடுகளம் நரேன் ஆல் இன் ஆல் அழகுராஜாவில் கலக்கியதைப் போல் இதிலும் கலக்கி இருக்கிறார். விழா நாயகன் ஜிப்ரானுடன் இப்படத்தில் இணைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி. இப்பாடல்களை கேட்கும் போது எனக்கு ஆடுகளம் பாடல்கள் நினைவு வருகிறது. எனக்கு படத்தில் தங்கள் முழு ஒத்துழைப்பை கொடுக்கும் தொழில்நுட்பக்கலைஞர்களை மிகவும் பிடிக்கும். அப்படி ஜிப்ரானையும் பிடித்திருக்கிறது. ஒளிப்பதிவாளர் ஜேக்கப்னின் வேகம் கல்யாணின் வேகத்திற்கு இணையானது. அவருக்கும் வாழ்த்துக்கள். இயக்குநர் கௌரவ் இயக்கத்தில் ஹிந்தியில் ஒரு பிரபல நாயகனை வைத்து படம் தயாரிக்க இருக்கிறோம். அது குறித்த அறிவிப்பு விரைவில் வரும். இந்த தகவல் இன்னும் கௌரவிற்கு கூட தெரியாது. படக்குழுவினர் அனைவருக்கும் நன்றி.

நடிகர் சந்தானம் பேசும் போது,

"எல்லோருக்குமே வாழ்வில் ஒரு பயம் வரும். அப்படி ஒரு பயம் வரும் போதெல்லாம் என் பின்னால் இருந்து என்னை தாங்கிப் பிடிக்கும் என் ரசிகர்கள் அனைவருக்கும் நன்றி. இந்த டைட்டிலை தயாரிப்பாளர் ஞானவேல்ராஜா சார் தான் வைத்திருப்பாரோ என்று தோன்றுகிறது. நான் அவரை "அண்ணா" என்று அழைப்பேன். அவரும் என்னை பதிலுக்கு அண்ணா என்று அழைப்பார். கோயமுத்தூர் ஸ்லாங்கில் பேசிக் கொள்வது போல் பேசிக் கொள்வோம். நான் நாள்கணக்கில் கொஞ்சம் அதிகம் சம்பளம் வாங்கிக் கொண்டு இருந்த காலத்தில் என்னை அணுகி, இடம் வாங்கி விட்டீர்களா..? என்று கேட்டார். இல்லை என்றதும் இந்த நாள் கணக்கில் சம்பளம் வாங்குவதை விட்டுவிட்டு மூன்று படங்களுக்கு மொத்தமாக சம்பளம் வாங்கிக் கொள்ளுங்கள். அதில் முதலில் ஒரு இடத்தை வாங்குங்கள்" என்று வழிகாட்டி என்னை முதன்முதலாக இடம் வாங்க வைத்த தயாரிப்பாளர் அவர் தான். தானும் வளர வேண்டும். தன்னுடன் சேர்ந்து மற்றவர்களும் வளர வேண்டும் என்கின்ற நல்லெண்ணம் அவருக்கு உண்டு. ரொம்பவே ஞானம் உள்ள புரொடியூஷர் ஞானவேல்ராஜா. 2024ம் ஆண்டு ஞானவேல்ராஜாவுக்கான ஆண்டு என்று கூறினார்கள். இது எனக்கு முன்பே தெரியும். ஏனென்றால் அவர் எப்படி சிந்திப்பார் என்பதை நான் அறிவேன். என் படங்கள் சரியாக போகாத போது, வீட்டிற்கு வந்து என்னுடன் கலந்தாலோசித்து எனக்கு ஆலோசனைகள் வழங்குவார். அது போல் தனஞ்ஜெயன் சார் தயாரிப்பில் கண்டேன் காதலை படத்தில் நடிக்கும் போது ஒரு கிராமத்து கெட்டப் கொடுத்து ஒட்டு மீசையோடு நடிக்க வைத்தது தனஞ்ஜெயன் சாரின் முடிவு தான். தயாரிப்பாளராக மட்டுமின்றி கதாபாத்திர வடிவமைப்பையும் யோசிக்கும் தனஞ்ஜெயன் உடன் இருக்கும் போது ஸ்டுடியோ க்ரீன் இன்னும் பல உச்சங்களை தொடும் என்று நம்புகிறேன்.

இயக்குநர் கல்யாண் என்னிடம் எப்போதுமே கால்ஷீட் கேட்டுக் கொண்டே இருப்பார். நான் என்னிடம் தேதி இல்லை என்று சொல்லிக் கொண்டே இருப்பேன். அப்படி ஒரு முறை கேட்கும் போது 15 நாள் மட்டுமே எனக்கு ப்ரேக் இருக்கிறது என்று சொன்னேன். உடனே அப்படி என்றால் வாருங்கள் சார் நாம் டாக்கி போர்ஷனை முடித்துவிடுமோம் என்று கூறினார். எனக்கு அதிர்ச்சி ஆகிவிட்டது. எப்படி முடிப்பீர்கள், மீது உள்ளதை எப்போது எடுப்பீர்கள் என்று கேட்டேன். ஒரு படப்பிடிப்புக்கு செல்வதற்கு 20 நாட்கள் முன்பே எப்படி படப்பிடிப்பை நடத்துவது என்று திட்டம் இடுவார்கள். இவர் 20 நாளில் மொத்த படப்பிடிப்பையே எப்படி முடிப்பது என்று திட்டமிடுகிறார். பிக் பாஸ் ஹவுஸை விட எங்கள் படப்பிடிப்பு தளத்தில் அதிக கேமராக்கள் இருக்கும். எல்லோரும் அனகோண்டா முட்டையில் ஆம்லேட் போடுவார்கள் என்றார், இயக்குநர் கல்யாண் அவிச்ச முட்டையில் ஆம்லேட் போட்டுவிடுவார். சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது ஐ போனில் ஒரு குளோஷப் ஷாட் எடுத்துக் கொண்டு போவார். சூட்டிங் ஸ்பாட் டாஸ்மாக் கடையின் முன்புறம் போல் எப்பொழுதும் கூட்டமாகத் தான் இருக்கும். எல்லோரும் கிம்பலை வைத்து படப்பிடிப்பு நடத்துவார்கள். இவர் கும்பலை வைத்துக் கொண்டு தான் படப்பிடிப்பு நடத்துவார். எனக்கே எப்படி இவ்வளவு ஆர்ட்டிஸ்டுகளை வைத்துக் கொண்டு இவ்வளவு வேகமாக படப்பிடிப்பு நடத்துகிறார் என்று ஆச்சரியமாக இருக்கும். என்ன நினைத்தாரோ அதை சிறப்பாக எடுத்து முடித்திருக்கிறார் இயக்குநர் கல்யாண். அவருக்கு மிக உறுதுணையாக இருந்தது ஒளிப்பதிவாளர் ஜேக்கப், நான் வீட்டுக்கு கிளம்புகிறேன் என்றால் என் காரில் ஒரு ரிக்கை கட்டி அனுப்பிவிடுவார்கள். எனக்கு மட்டும் இல்லை. எல்லா ஆர்டிஸ்டையும் ஒரு கேமரா துரத்திக் கொண்டு செல்லும். இசையமைப்பாளர் ஜிப்ரான் உடன் 'ஓடி ஓடி உழைக்கணும்' என்கின்ற படத்தில் பணியாற்றினேன். அப்படம் வெளியாகவில்லை. அதில் மிகச்சிறப்பான ஒரு மெலடி பாடலை கொடுத்து இருந்தார். இப்படத்தில் அவரோடு பணியாற்ற முடிந்தது சிறப்பான அனுபவம். படத்தில் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் சார், சுந்தர்ராஜன் சார், முனிஷ்காந்த், கிங்ஸ்லி இவர்கள் நால்வரும் ஒரு அணி, ஒரு கிண்டலான வசனம் வரும். அதை சிறப்பாக ரவிக்குமார் சார் செய்திருக்கிறார்.

இயக்குநர் சுந்தர்ராஜன் சார் இறந்த பிணமாக நடித்திருக்கிறார். இறந்த பின் காமெடி செய்யும் கதாபாத்திரம். மனோபாலா சார், மொட்டை ராஜேந்திரன் மற்றும் மன்சூரலிகான் சார் மூவரும் ஒரு கேங். பாட்ஷா படத்தில ரஜினி சாரை கம்பத்துல கட்டி வைச்சி அடிச்ச ஆனந்தராஜ் சாரை காட்டன் புடவை கட்ட வைச்சி காமெடி பண்ணியிருக்காங்கஞ். ஆடுகளம் நரேன் சாரை வேற மாதிரி இந்தப் படத்துல மாத்தி வச்சிருக்காங்க, அதை பார்க்கும் போதே இந்த காமெடி எல்லாம் வொர்கவுட் ஆகும்ங்குற நம்பிக்கை வருது. படத்துல வேலை பார்த்த தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் நன்றி.

சந்தானம் படம் என்றாலே ஹீரோயின் கிடைக்கவில்லை என்கின்ற நியூஸ் வைரல் ஆகும். ஆனா இந்த படத்துல தமிழ் பேசத் தெரிஞ்ச ராதிகா அழகான ஹீரோயினா கிடைச்சிருக்காங்கஞ் இந்தக் கதைக்குள்ள லவ்வை ரொம்ப அழகா இயக்குநர் கொண்டு வந்திருக்காருஞ் என் தங்கச்சி கதாபாத்திரத்துல சங்கீதா நடிச்சிருக்காங்கஞ் அவுங்ககிட்ட நான் போடுற ஒரு சவால்ல தான் மொத்த கதையும் மூவ் ஆகும். 80 காலகட்டத்துல எடுக்க வேண்டிய படத்தை இப்ப எடுத்திருக்காங்கன்னு நினைக்காம, 80ஸ்ல நடக்குற ஒரு கதையை 80ஸ் காலகட்டத்துக்கே போயி நாம பாக்குறோம்னு நினைச்சி நீங்க பாத்தீங்கன்னா இந்தப் படம் உங்களுக்கு ரொம்ப பிடிக்கும். குடும்பத்தோடு பாக்கலாம். லாஜிக் இதெல்லாம் தூக்கி ஓரமா வச்சிட்டுப் பாத்தீங்கன்னா இந்தப் படம் குடும்பத்தோட பாத்து குதூகலிக்கிற ஒரு படமா இருக்கும். பத்திரிக்கை நண்பர்கள் இந்தப் படத்திற்கு ஆதரவு தருவீர்கள் என்று நம்புகிறேன். " என்று பேசினார்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

திங்கள்கிழமை,
நவம்பர் 20, 2023

# இந்தியன் ரெனிவபில் எனெர்ஜி டெவலெப்மெண்ட் ஏஜென்சி லிமிடெட் - ன் தொடக்க பொது பங்கு வெளியீடு 2023 நவம்பர் 21 அன்று தொடங்குகிறது!




சென்னை, 20 நவம்பர் 2023: இந்திய அரசின் ஒரு நிறுவனமான இந்தியன் ரெனிவபில் எனெர்ஜி டெவலெப்மெண்ட் ஏஜென்சி லிமிடெட், முதன்முறையாக வெளியிடும் தொடக்கநிலை பொது பங்கு வெளியீட்டிற்கு ஒரு ஈக்விட்டி பங்கிற்கு ரூ.30 முதல் ரூ.32 வரை என்ற விலை வரம்பை நிர்ணயித்திருக்கிறது. பொது நிதி நிறுவனமாக அறிவிக்கை செய்யப்பட்டிருக்கும் இந்நிறுவனம், முக்கியமான, டெபாசிட் பெறாத வங்கி சாரா நிதி நிறுவனம் மற்றும் உட்கட்டமைப்பு நிதி நிறுவனம் என்ற தகுநிலையுடன் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்நிறுவனத்தின் ஐ பி ஓ, 2023 நவம்பர் 21 செவ்வாய் அன்று பொதுமக்களின் சப்ஸ்கிரிப்ஷனுக்காக தொடங்கும் மற்றும் 2023 நவம்பர் 23 வியாழனன்று முடிவிற்கு வரும். முதலீட்டாளர்கள், குறைந்த பட்சமாக 460 ஈக்விட்டி பங்குகளுக்கும் மற்றும் அதற்கு பிறகு 460 பங்குகளின் பன்மடங்கு எண்ணிக்கைக்கும் விண்ணப்பிக்கலாம். இந்த ஆஃபர், 403,164,706 என்ற ஈக்விட்டி பங்குகளின் புதிய வெளியீடும் மற்றும் 268,776,471 ஈக்விட்டி பங்குகள் வரை விற்பனைக்கான ஆஃபர் என்பதனை உள்ளடக்கி மொத்தத்தில் 671,941,177 ஈக்விட்டி பங்குகளை கொண்டிருக்கிறது.

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் செயல் திட்டங்களுக்கும் மற்றும் எரிசக்தி திறன் மற்றும் சேமிப்பு செயல் திட்டங்களுக்கும் ஆதரவளித்து அவைகளுக்கு நிதி உதவியை வழங்கி வருவதில் 36 ஆண்டுகள் அனுபவத்தை கொண்ட நிதி நிறுவனமாக ஐ ஆர் ஈ டி ஏ திகழ்கிறது. திட்ட கருத்துருவாக்கத்திலிருந்து தொழிலகத்தை செயலாக்கம் செய்வது வரை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் செயல் திட்டங்களுக்கு பல்வேறு நிதிசார் திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. இத்துறைக்கான சாதன உற்பத்தி மற்றும் பகிர்மானம் போன்ற மதிப்பு சங்கிலி செயல்பாடுகளுக்கும் இது உதவி வருகிறது. இந்தியாவில் பசுமை செயல் திட்டங்களுக்கு நிதி வழங்கிவரும் இந்தியாவின் மிகப்பெரிய என் பி எஃப் சி - ஆக திகழும் ஐ ஆர் ஈ டி ஏ, ஐ எஃப் எஸ் சி பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட இந்தியாவின் முதல் கடன் பாதுகாப்பை (பசுமை மசாலா பத்திரம்) வெளியிட்ட முதல் நிறுவனமாகும். இந்தியாவில் டி எஃப் ஐ கள் / மல்டிலேட்டரல் நிறுவனங்களிலிருந்து உலகளவில் காலநிலை செயல்பாடுகளுக்கான ஆதாரங்களுக்கு முதன்முறையாக நிதி திரட்டுகிற ஒரு சில நிதி நிறுவனங்களுள் ஒன்றாகும்.

இந்தியாவெங்கிலும், 2023 செப்டம்பர் 30 - ஆம் தேதியன்று, 23 மாநிலங்கள் மற்றும் 5 யூனியன் பிரதேசங்களில் கால வரையறை கடன்களை வழங்கி இருக்கிறது. நாடெங்கிலும் தனது செயல்பாடு சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்திற்காக மும்பை, ஹைதராபாத், சென்னை மற்றும் புவனேஷ்வர் ஆகிய 4 அமைவிடங்களில் கிளைகளை இது கொண்டிருக்கிறது.

ஆர் ஈ மற்றும் ஈ ஈ சி செயல்திட்டங்களுக்கு வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு நிதியையும் ஐ ஆர் ஈ டி ஏ வழங்கி வருகிறது. அரசின் அமைப்புகளுக்கு கடன்களையும் மற்றும் ஆர் ஈ சாதனங்களின் தயாரிப்பாளர்கள், சப்ளையர்கள்/ஒப்பந்ததாரர்களுக்கு நிதி திட்டங்களையும் இது கூடுதலாக வழங்குகிறது. அத்துடன் கடன் அடிப்படை அல்லாத பல்வேறு நிதி பரிவர்த்தனைகளுக்கான சேவைகளையும், உத்தரவாத உதவியினையும் இது வழங்குகிறது. மேலும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப - வணிக செயல்பாடுகளுக்கு ஆலோசனை சேவைகளையும் இது வழங்குகிறது. 2023 செப்டம்பர் 30 அன்று இந்நிறுவனம் வழங்கியிருக்கும் கடன் தொகுப்பில் நிலுவையிலுள்ள தொகை ரூ. 475,144.8 மில்லியன் என்பதாக இருந்தது. 2023 நிதியாண்டில், இதன் நிகர வட்டி வருவாய், முந்தைய ஆண்டின் அளவான ரூ. 11,280.44 மில்லியன் என்பதற்கு எதிராக ரூ. 13,237.65 மில்லியனாக அதிகரித்திருக்கிறது. 2022 நிதியாண்டில் ரூ. 6,335.28 மில்லியனாக இருந்த நிகர இலாபம் 2023 - ஆம் ஆண்டில் ரூ. 8,646.28 மில்லியனாக உயர்ந்திருக்கிறது. 2023 நிதியாண்டிற்கு முதலீடு மற்றும் இடர் ஒப்பீட்டு சொத்து விகிதம் 18.82% - ஆகவும் மற்றும் 2023 செப்டம்பர் 30 - ல் முடிவடைந்த 6 மாத கால அளவிற்கு 20.92% - ஆகவும் பதிவாகியிருக்கிறது.

2023 செப்டம்பர் 30-ல் 6 மாத கால அளவிற்கு நிகர வட்டி வருவாய் ரூ. 7,854.23 மில்லியனாகவும் மற்றும் வரிக்கு பிந்தைய இலாபம் ரூ. 5,793.15 மில்லியனாகவும் இருக்கிறது. இதே கால அளவிற்கு, ஐ ஆர் ஈ டி ஏ ஒப்பதலளித்த மொத்த கடன்களின் தொகை, ரூ. 47,445.03 மில்லியன் என பதிவாகியிருக்கிறது.

ஈக்விட்டி பங்குகளின் விலை வரம்பில் ஏதும் திருத்தம் இருக்குமானால் அத்தகைய திருத்தம் செய்யப்பட்டதற்கு பிறகு மூன்று கூடுதல் பணி நாட்களுக்கு பங்குகளுக்கான ஆஃபர் கால அளவு நீடிக்கப்படும்; எனினும், இது 10 பணி நாட்கள் என்ற கால அளவிற்கு மிகைப்படாது. விலை வரம்பில் ஏதும் திருத்தம் மற்றும் திருத்தியமைக்கப்படும் ஆஃபர் கால அளவு இருக்குமானால், பங்குச்சந்தைகளுக்கு அறிவிக்கையுடன், ஒரு பொது அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் இத்தகவல் பரவலாக தெரிவிக்கப்படும். அத்துடன் இப்பங்கு வெளியீட்டில் கணக்கு பராமரிப்பிற்கான லீடு மேலாளர்களின் வலைத்தளங்களிலும் மற்றும் சிண்டிகேட் உறுப்பினர்களின் முனையங்களிலும் மாற்றம் குறித்த தகவல் இடம்பெறும். பொருந்துகிறவாறு ஸ்பான்சர் செய்யும் வங்கிகள் மற்றும் பிற குறித்துரைக்கப்படும் இடையீட்டு நபர்கள் சுய சான்றளிக்கப்பட்ட சிண்டிகேட் வங்கிகளுக்கும் இது குறித்த தகவல் வழங்கப்படும்.

# மெட்டாவெர்ஸ் ஐப் பயன்படுத்தி, பிட்ஸ் பிலானி டபிள்யூ ஐ எல் பி, இந்தியாவின் போற்றத்தக்க மிகப்பெரிய, பணிபுரியும் தொழில் வல்லுனர்களுக்கான பட்டமளிப்பு விழாவை நடத்துகிறது

சென்னை, 20 நவம்பர் 2023: பிர்லா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி அண்ட் சயின்ஸ் பிலானி இன் ஒர்க் இன்டகிரேட்டட் லேர்னிங் புரோகிராம்ஸ் பிரிவு ஒரு பட்டமளிப்பு விழாவை நடத்தியது, இதில் 7514 பணிபுரியும் நிபுணர்களுக்கு 26 வெவ்வேறு பட்டப்படிப்புகளில் (அதாவது எம்.டெக் உடன் 5183 , எம்பிஏ உடன்1641 , பி.டெக். உடன் மற்றும் 70 எம்.எஸ்சி. உடன் 620 பட்டங்களுடன்) பட்டங்கள் வழங்கப்பட்டன.

குறிப்பாக அறிவியல், பொறியியல் மற்றும் மேலாண்மைத் துறைகளில் ஒரு முன்னணி உயர்கல்வி நிறுவனத்தால், இவ்வளவு ஒரு பெரிய அளவில் பணிபுரியும் தொழில் வல்லுநர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியாவின் போற்றத்தக்க முதல் பட்டமளிப்பு விழா இதுவாகும். சுமார் 900 பணிபுரியும் தொழில் வல்லுநர்கள், தங்கள் அன்புக்குரியவர்களுடன், ஹைதராபாத் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று நேரில் பட்டங்களைப் பெற்றனர், மேலும் பல ஆயிரக்கணக்கானோர் ஒரு கிட்டத்தட்ட யதார்த்தமான மற்றும் ஆழமான சூழலில் இந்த புரட்சிகரமான மெட்டொவெர்ஸ் தொழில்நுட்பம் மூலம் தங்களுடைய பட்டங்களைப் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக கலந்து கொண்ட சயிண்ட் சிஹ்வீமீஸீமீ நிறுவனத்தின் நிறுவனர் தலைவர், நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான டாக்டர் பிவிஆர். மோகன் ரெட்டி அனைத்து பட்டதாரிகளுக்கும் தனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்தார். வாழ்நாள் முழுவதும் கற்றலின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார் மற்றும் பட்டதாரிகள் தங்கள் லட்சியங்களில் உறுதியாக இருக்க வேண்டும் என்றும், சராசரித் தன்மையில் திருப்தி அடையக்கூடாது என்றும், தொடர்ந்து சிறந்து விளங்குவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பத்ம பூஷன் விருது பெற்ற பிஐடிஎஸ் பிலானியின் வேந்தர் டாக்டர் குமார் மங்கலம் பிர்லா, தனது சிறப்புச் செய்தியின் மூலம், பட்டதாரிகளை கனவு காணவும், ஒரு மாற்றத்தை உருவாக்கவும் ஊக்குவித்தார், மேலும் அவர்களின் அயராத முயற்சியின் மூலம் தகுதியான இலக்குகளைப் பெற்றதற்காக அவர்களை வாழ்த்தினார். மூத்த தலைமைக் குழு, செனட், ஆசிரியர்கள் மற்றும் பிஐடிஎஸ் பிலானியின் பணியாளர்கள் (பட்டதாரிகளின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியவர்கள் அல்லது அந்தந்தத் திறன்களில் அவர்களை ஆதரித்தவர்கள்) ஆகியோரின் இந்த முன்னிலை, ஒட்டுமொத்த பட்டமளிப்பு அனுபவத்தை இன்னும் அதிகமாக மறக்க முடியாததாக மாற்ற உதவியது.

பிஐடிஎஸ் பிலானியின் துணைவேந்தர் பேராசிரியர் வி. ராம்கோபால் ராவ், பட்டதாரிகளுக்கு தனது வாழ்த்துச் செய்தியில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஐடிஇஎஸ், உற்பத்தி, மின்சாரம் மற்றும் மின்னணுவியல், பி.எப்.எஸ்.ஐ ஃபார்மா மற்றும் ஹெல்த்கேர், வாகனம் மற்றும் ஆற்றல் போன்ற துறைகளின் மாறும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கல்வியில் ஒரு மேம்பட்ட கவனம் செலுத்துவதன் முக்கிய பங்கை வலியுறுத்தினார். வேலை ஒருங்கிணைந்த கற்றல் திட்டங்களின் பட்டதாரிகள், பெற்ற அறிவை தங்கள் சொந்த தொழில் மற்றும் நிறுவனங்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், உண்மையான தேசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு பங்களிப்பதிலும் ஒரு முக்கிய பங்காற்றுவார்கள் என்று அவர் உறுதிப்படுத்தினார்.

அவரது பட்டமளிப்பு உரையின் போது, பிஐடிஎஸ் பிலானி இன் ஆஃப் கேம்பஸ் ப்ரோகிராம்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீ என்கேஜ்மென்ட் இயக்குனர் பேராசிரியர் ஜி. சுந்தர் கூறும்பொழுது, "இப்போது 43 ஆண்டுகளுக்கும் மேலாக, 114,000 க்கும் மேற்பட்ட பணிபுரியும் வல்லுநர்கள் பிஐடிஎஸ் பிலானியின் மிகவும் பாராட்டப்பட்ட வேலை ஒருங்கிணைந்த கற்றல் திட்டங்களைப் பயன்படுத்தியுள்ளனர். கணினி அறிவியல் மற்றும் தகவல் அமைப்புகள், கோர் இன்ஜினியரிங், எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங், அல்லது மேனேஜ்மென்ட் துறைகள் என எதுவாக இருந்தாலும், ஒருங்கிணைந்த கற்றல் துறையில் முன்னணி நிறுவனமாக எங்களின் முக்கிய முயற்சி, அவர்களின் முதலாளிகளுடன் பயனுள்ள ஒத்துழைப்பு மூலம், பணிபுரியும் நிபுணர்களின் கற்றல் அனுபவங்களை தொடர்ந்து மேம்படுத்துவதாகும். பணிபுரியும் வல்லுநர்கள் இந்த சுற்றுச்சூழல் அமைப்பின் மையத்தில் இருப்பதால், இன்று அவர்கள் பட்டம் பெற்றதற்கும், ஈர்க்கக்கூடிய மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் அனுபவங்களை வடிவமைத்து வழங்குவதில் எங்களுக்கு உதவுவதில் அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளுக்காக நான் அவர்களை வாழ்த்த விரும்புகிறேன்." என்று கூறினார்.

# அறன் இயக்கத்தில் ஷாரிக் ஹாசன், அம்மு அபிராமி நடிக்கும் ஜிகிரி தோஸ்த்

சென்னை, 20 நவம்பர் 2023: இந்திய சினிமாவின் முன்னணி இயக்குனர் ஷங்கரின் முன்னாள் உதவி இயக்குனரும், பல விருதுகளை வென்ற குறும்படங்களை இயக்கியவருமான அறன் தமிழ் சினிமாவில் இயக்குனராக களமிறங்குகிறார். கே.பிரதீப் உடன் சேர்ந்து இப்படத்தை தயாரிப்பதுடன் படத்தின் முக்கியமான கதாபாத்திரத்திலும் நடிக்கிறார் அறன். ஜிகிரி தோஸ்த் என்ற தலைப்பில் உருவாகி இருக்கும் இந்த படத்தை எஸ்.பி.அர்ஜூன் மற்றும் ஹக்கா ஜெ இணைந்து தயாரித்துள்ளனர்.

படத்தின் தலைப்புக்கு ஏற்றார்போல், இதன் கதை நண்பர்களை சுற்றியே நகர்கிறது. மூன்று நண்பர்கள் அவுட்டிங் செல்லும் வழியில், ஒரு பெண் கொடூர கேங்ஸ்டர்களால் கடத்தப்படுவதை பார்க்கின்றனர். பிறகு, அந்த பெண்ணை கேங்ஸ்டரிடம் இருந்து காப்பாற்றினார்களா என்பதே படத்தின் கதையாக உருவாக்கி வருகிறார்கள். இதில் அவர்கள் "டெரரிஸ்ட் டிராக்கர்" எனும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது இப்படத்தின் சிறப்பம்சம்.

அறன் மட்டுமின்றி பிக் பாஸ்-இல் புகழ் பெற்ற ஷாரிக் ஹாசன், அம்மு அபிராமி ஆகியோரும் இந்த படத்தில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் வி.ஜே.ஆஷிக், பவித்ர லக்ஷ்மி, அனுபமா குமார், கௌதம் சுந்தரராஜன், சிவம், ஜாங்கிரி மதுமிதா, லேட் ஆர்.என்.ஆர். மனோகர், சரத், பப்ளிக் ஸ்டார் துரை சுதாகர் ஆகியோரும் முன்னணி கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர்.

படத்தை அறன் எழுதி, இயக்க, அஸ்வின் விநாயகமூர்த்தி இசையமைக்கிறார். படத்தொகுப்பு பணிகளை அருள் மொழி வர்மன், ஒளிப்பதிவு ஆர்.வி. சரண், சண்டை பயிற்சி மகேஷ் மேத்யூ, நடனம் தினா, ஆடியோகிராஃபி பணிகளை சரவண குமார், டி.ஐ. மற்றும் சி.ஜி. பணிகளை ஏ.கே. பிரசாத் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். இந்த படத்தின் பாடல்களை சுதன் பாலா எழுதியிருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து தற்போது பின்னணி வேலைகள் நடைபெற்று வருகிறது. டிசம்பர் மாதம் இப்படத்தை வெளியிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

